# விவசாய தொழில்நுட்பத் தகவல்

**விவசாய தொழில்நுட்ப தகவல்களை விவசாயிகளிற்கு மிக விரைவாக வழங்கும் ஒரு கையேடு.**

**விவசாயத் திணைக்களத்தின் தேசிய விவசாய தகவல், தொடர்பாடல் நிலையத்தின் வெளியீடு.**

**தொழில்நுட்ப பிரசுரம் இலக்கம் 74 - 2021 டிசம்பர்**



# கொடித்தோடை பயிர்ச்செய்கையில் உயர் வருமானத்தைப் பெற Horana gold passion fruit



வியாபார மட்டத்தில் பல பயிற்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் மத்தியில் கொடித்தோடை முக்கிய இடத்தில் உள்ளது. 8 தொடக்கம் 9 மாத இடைவெளியின் பின் பயிரின் மூலம் பணம் சம்பாதிக்க முடிவதுடன் மூன்று வருட காலம் தொடர்ச்சியாக பயிரில் இருந்து வருமானத்தை பெறக்கூடியதாக இருப்பதுடன் தமது அறுவடை எமது நாட்டில் மட்டுமன்றி ஏற்றுமதியிலும் பிரதான இடத்தை பிடித்திருப்பது இதற்கான பிரதான காரணமாகும். இதுவரை காலமும் விவசாய திணைக்களத்தினால் தண்டு துண்டங்கள் மூலம் மாத்திரமே கொடித்தோடை உற்பத்தி செய்யப்பட்டது. அதற்கு காரணமானது அவை கலப்பின வர்கங்கள் என்பதனாலாகும். விதைகள் மூலம் உற்பத்தி செய்ய முயல்வோம் ஆனால் வர்கங்கள் உருவாக காரணமாக இருந்த பெற்றோர் தாவரங்களின் இயல்புகள் வெளிப்பட்டு கலந்த வர்கங்கள் தோன்றும். மானி எனும் பெயரில் மஞ்சள் நிற காய்களை உடைய சிபாரிசு செய்யப்பட்ட வர்கமானது தற்போது பயிர் நிலங்களில் இருந்து காணமல் செல்வதற்கு காரணம். தண்டுத் துண்டங்கள் மூலம் நாற்றுக்களை உற்பத்தி செய்யும் வேலைத்திட்டம் முறையாக செயற்படாமையினால் இவ் வர்க்கத்தினை தற்போது காணமுடியாதுள்ளது. விதைகள் மூலம் இனப்பெருக்கம் அடைந்தமையி னால் மானி வர்க்கத்தின் பரம்பரைகள் தற்போது வெளிப்படுத்துவது வேறு இயல்புகள் ஆகும். அவ்வாறெனில் உண்மையான இயல்புகளை உடைய மானி கொடித்தோடை வர்கமானது இன்று இல்லை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். எவ்வாறெனினும் பண்டார வெல ஊதா மற்றும் ரகங்கலை கலப்பினம் ஆகிய சிபாரிசு செய்யப்பட்ட வர்கங்கள் தண்டுத் துண்டங்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுவதால் இன்றும் விவசாயிகளின் மத்தியில் காணப்படுகின்றது. எனினும் அவை உயர்நாட்டு காலநிலைக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டவை மேலும் ஊதா நிற காய்களை கொண்டிருக்கும். தாழ்நாட்டு வலைய விவசாயிகள் மத்தியில் அதிக கேள்வியுடன் காணப்படும் மஞ்சள் நிறக் காய்களை உடைய கொடித்தோடை வர்கத்தின் தேவை காணப்படுகிறது. அது விதை மூலம் இனப்பெருக்கம் செய்யக்கூடிய வர்கமாக காணப்படுவது அவசியமானதொன்றாகும்.



அந்த குறைபாட்டை நிவர்த்தி செய்ய ஹோரண கோல்ட் ரெட் எனும் பெயரில் மஞ்சள் நிற பழத்தினை கொண்ட வர்கமானது 2017 ஆம் ஆண்டு சிபாரிசு செய்யப்பட்டது. பத்து வருட காலமாக அவ் வர்கத்தின் இயல்புகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் விளைவாக இதனை குறிப்பிடலாம். ஊதா வர்கத்துடன் ஓப்பிகையில் இதன் காயின் அளவானது பெரிதாகும். நிறையிலும் அதிகமாகும் அதனால் அதிகளவான யூஸ் உள்ளடங்கியுள்ளது. இந்த காலத்தில் கொடித்தோடையானது அதிகளவில் நேரடி பானமாக பயன்படுத்துவதை விட தொழிற்சாலை உற்பத்திக்காக அதிகளவு பயன்படுத்துகின்றது. கோடியல் ஜம் போன்ற உற்பத்திக்கு மேலதிகமாக குளிரூட்டப்பட்ட நிலையில் கொடித்தோடை கூழ் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றுது. அதன் காரனமாக தரமான விளைச்சலுக்கு அதிக கேள்வி காணப்படுகின்றது. Horana gold passion வர்கமானது இந்த சவாலை தீர்கொள்ளகூடியது என அதன் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**“இதனை கூட்டு வர்க்கமாக குறிப்பிட முடியும். சாதாரனமாக தாவரங்களில் கலப்பினத்தை உருவாக்கும் போது தாய் தந்தை என இரன்டு வர்கங்கள் மாத்திரமே பயன்படுத்தப்படும். இங்கு பெற்றோர் தாவரங்களாக பத்திற்கும் மேற்பட்டவை காணப்படுகின்றன. அதாவது சிறந்த குணங்களை உடைய கொடித்தோடை பெற்றோர் தாவரத்தை தெரிவு செய்து ஒரே பயிர் நிலத்தில் பயிரிடப்படும் அனைத்திற்கும் இடையில் மகரந்தச்சேர்கையானது மேற்கொள்ளப்படும். அதன் பின் விதைகள் மூலம் கிடைக்கும் பரம்பரையின் மிகவும் சிறந்த பரம்பரையானது தெரிவு செய்யப்படும். அவ் பரம்பரைகளுக்கு இடையிலும் மீண்டும் மகரந்தச்சேர்கை செய்யப்பட்டு விதைகள் மூலம் கிடைக்கும் பரம்பரையில் மீண்டும் அவற்றுக்கிடையே மகரந்தச்சேர்கை செய்யப்படும். வேறு விதத்தில் இந்த செயன்முறையை குறிப்பிடுவோம். இங்கு இனப்பெருக்கம் தெரிவு ஆகிய இரண்டும் நடைபெறும். மூன்று பரம்பரைகள் முன்னோங்கிச் சென்ற பின் எம்மால் சிறந்தவற்றை வேறுபடுத்த முடியும். அவற்றுக்கிடையில் மகரந்தச் சேர்கையின் மூலம் கிடைக்கும விதைகள் சமமான அளவில் கலந்த இறுதி வர்கத்தினை தயாரிக்கலாம். இவ்வாறான வர்க்கங்களுக்கு கூட்டு வர்க்கம் எனக் குறிப்பிடலாம். இவற்றின் இயல்புகளை குறிப்பிட்டு கூறுவதைவிட ஒரு குறித்த வரையறைக்கு உட்பட்டதாக கூறுவதே சிறந்ததாகும்”**



கூட்டு குணம் பற்றி அவ்வாறு குறிப்பிட்டது இந்த கொடித்தோடை வர்கத்தினை தோற்றுவிக்க பொறுப்பாக இருந்த உதவி விவசாய பணிப்பாளர் களுபோவில அம்மணி ஆவார். வெளிப்படையான இயல்புகள் குறித்த வரையறைகள் காணப்படுவதனால் ஒரே பயிர்செய்கையில் பெரும் பகுதி பெரிய மற்றும் நடுத்தர அளவுடைய காய்களை கொண்டதாகவும் குறைந்த அளவிலான சிறிய காய்களை கொண்டதாகவும் நிறை மற்றும் யூஸ் அதிகளவு நிரம்பியதாகவும் காணப்படும். horana gold passion எனும் கூட்டத்தில் அடங்கியிருப்பது அதிகமாக பெரிய காய்களை தரக்கூடிய வர்கமாகும்.

**“பிஸ்க் அளவானது கொடிக்கு கொடி வேறுபடும் சாதாரணமாக இதன் அளவானது 15 தொடக்கம் 20ற்கு இடைப்பட்டதாக காணப்படும். காயின் அமைப்பானது வட்டம் அல்லது நீள் வட்டமாக காணப்படும்.கொடிகளை குறித்த காலத்தில் கத்தரித்து, செயற்கையாக மகரந்தச் சேர்க்கை செய்து, நன்கு பராமரித்தால் ஹெக்டயாரிற்கு 50 மெற்றிக்தொன் எனும் உயர் அறுவடையினை பெறமுடியும். எனினும் விவசாயிகளின் சாதாரண அறுவடையாக 20 மெட்டிக்தொன் அளவில் காணப்படுகின்றது. பயிர்ச்செய்கையின் முறையான முகாமைத்துவம் மூலம் இந்த அறுவடையை அதிகரித்துக்கொள்ள முடியும்.”**



என மேலும் களுபோவில அம்மணி குறிப்பிடுகிறார். வர்க்கத்தின் உரிமையாளர்களாக விதை உற்பத்தி செய்வது ஹொரண பழங்கள் ஆராய்ச்சி நிலையத்தில் ஆகும். அவற்றின் மூலம் பண்ணையில் விதையானது உற்பத்தி செய்யப்படுகின்றது.திணைக்களத்தின் விதை விற்பனை நிலையத்தில் தற்போது இந்த வர்கத்தின் விதைகள் விற்பனை செய்யப்படுகின்றன. சாதாரணமாக 50000 விதைகள் ஒரு கிலோகிராமில் அடங்கி இருக்கும். அதன் விலையானது ரூபாய் 10000 ஆகும். ஒரு ஏக்கர் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள 25 தொடக்கம் 30 கிராம் விதைகள் போதுமானது.

ஆத்துடன் ஒரு தடவை பயிர்செய்கையை மேற்கொண்ட விவசாயிக்கு தமக்கு தேவையான விதைகளை தாமாக உற்பத்தி செய்ய முடியும். அயன் மகரந்த சேர்கை அடையும் தாவரங்களின் நன்மை இதுவாகும் தெரிவுசெய்யக ் கூடிய சிறந்த கொடித்தோடை வர்கங்களுக்கு இடையே செயற்கைமுறையில் மகரந்தச்சேர்கை செய்த பின் அந்த பூக்களை மூடி வைப்பதன் மூலம் வேறு பூக்களின் மகரந்தங்கள் இதனுடன் கலப்பதை தவிப்பதன் மூலம் விதைகளை உற்பத்தி செய்து கொள்வது கடினமான விடயம் ஒன்று அல்ல.

**பிரதியாக்கம்** :- சனத் எம். பண்டார, உதவி விவசாயப் பணிப்பாளர், தேசிய விவசாயத் தகவல், தொடர்பாடல் நிலையம், கன்னொறுவை

**தொழில்நுட்ப உதவி** :- ஐ.களுபோவில, உதவி விவசாயப் பணிப்பாளர் (ஆராய்ச்சி), பழ ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம், கனன்வில, ஹொரண

**தமிழாக்கம் :-** ஐ.எஸ்.எம். ஹலீம்தீன் (உதவி விவசாயப் பணிப்பாளர்) **கணணி வடிவமைப்பு :-** ஜேசுரத்ணம்

மேற்பார்வை மற்றும் ஆலோசனை : டப்ளிவ்.எல். ஹிரான் பீரிஸ் (பணிப்பாளர்- தகவல். தொடர்பாடல்)
: ஐ.எஸ்.எம். ஹலீம்தீன் (உதவி விவசாயப் பணிப்பாளர்)